# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 27.08.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் அல் லைல் அதிகாரத்தை ஓதினார்கள்:**

**பொருள்: நிச்சயமாக நாம் இதனை தீர்ப்பிற்குரிய இரவில் இறக்கினோம். தீர்ப்பிற்குரிய இரவு என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது? தீர்ப்பிற்குரிய இரவு, ஆயிரம் மாதங்களை விட சிறந்ததாகும். அதில் வானவர்களும் அந்த ஆன்மாவும் (ஆத்மீகமும், பௌதீகமும் ஆன) அனைத்து விவகாரங்கள் தொடர்பாக தங்கள் இறைவனின் கட்டளையுடன் இறங்குகின்றனர். விடியற்காலை தோன்றும் வரை (அது முற்றிலும்) சாத்தியமாகவே இருக்கும். (97:1-7)**

இன்ஷா அல்லாஹ் இன்னும் ஒரு சில நாட்களில் நாம் ரமலானின் கடைசிப் பத்து நாட்களில் நுழைய உள்ளோம். இந்த பத்து நாட்களில் ஒரு இரவு லைலத்துல் கத்ர் என்று அழைக்கப்படுகிறது. அந்த இரவு ரமலானின் கடைசி 10 இரவுகளில் வருகிறது என்று ஹதீஸில் வந்துள்ளது. இந்த இரவில் இறைவனின் சிறப்பான அடியார்களின் மீது இறைவனின் பார்வை படுகிறது. அந்த அடியார்களின் ஆன்மீக நிலை சிறப்புமிக்கதாக ஆகிறது. அவர்கள் இறைவனின் சிறப்பான அருட்கொடையைப் பார்க்கின்றனர். இதன் காரணமாகவே பொதுவாக முஸ்லிம்கள் இந்தக் கடைசிப் பத்து நாட்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். பொதுவான தொழுகைகள் மற்றும் தராவீஹ் இன்னும் ஏனைய பிற நன்மைகளின் பக்கம் ரமலானின் முதல் மற்றும் இரண்டாவது பத்து நாட்களில் அதிக கவனம் செலுத்துவதில்லை. இதை ஒப்பிடும் போது கடைசி 10 நாட்களில் இதில் முன்னேற்றம் பெற முயற்சி செய்கின்றனர். இதில் கவனமாக இருப்பவர்கள் நமது ஜமாஅத்திலும் உள்ளனர். இந்த கடைசிப் பத்து நாட்களில் தஹஜ்ஜுத்தின் பக்கமும் கவனம் செலுத்துகின்றனர். இதற்குக் காரணம், ரமலானின் கடைசி பத்து நாட்களில் ஒரு இரவு லைலத்துல் கத்ர் என்று அழைக்கப்படுகிறது என்பது ஹதீஸில் கூறப்பட்டதாகும்.

ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த இரவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இரவாகும். ஆனால் நாம் வருடம் முழுவதும் இபாதத் செய்யாமல், ரமலானின் இந்த 10 நாட்களில் மட்டும் இபாதத்துகள் செய்தால் ஒருவரை உண்மையான இறை அடியாராக ஆக்குமா? ஆனால் இறைவன் திருக்குர்ஆனில், ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் (51:57) என்று கூறுகின்றான். வருடத்தில் ஒரே ஒரு இரவு மட்டும் என்னை வணங்குங்கள் அல்லது இந்த ஒரு இரவைத் தேடுவதற்காக வருடத்தில் 10 நாட்கள் மட்டும் என்னை வணங்கினால் போதும்; உங்களது பிறப்பின் நோக்கம் நிறைவேறி விடும் என்று இறைவன் கூறவில்லை. அவ்வாறு ஒரு இரவு மட்டும் இறைவனை வணங்கிக் கொண்டிருந்தால் மனிதனின் பிறப்பின் நோக்கம் ஒருபோதும் நிறைவேறாது. மாறாக இது மனிதனை இறைவனின் கட்டளைகளிலிருந்து விலக்கி விடும். எப்போதும் இறைவனுக்கு தலைவணங்கியவாறே இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் உபய் பின் காப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஒரு நபிமொழி அறிவிப்பு இவ்வாறு வருகிறது. அறிவிப்பாளர் கூறுகிறார்: நான் ஹஸ்ரத் உபய் பின் காப் (ரலி) அவர்களிடம் உங்களுடைய சகோதரரான இப்னு மஸ்வூத், முழு வருடமும் இறைவனை வணங்குபவர் தான் லைலத்துல் கத்ர் -ஐப் பெறுவார் என்று கூறுகிறாரே? என்று கேட்டேன். அதற்கு உபய் பின் காப் (ரலி) அவர்கள், அல்லாஹ் அவர் மீது கருணை காட்டுவானாக. மக்கள் இந்தவொரு இரவை மட்டும் சார்ந்திருந்து விடுவார்கள் என்பதற்காக அவர் அவ்வாறு கூறினார்.

குறிப்பிட்ட அந்த இரவு ரமலானில் வருகிறது. அதுவும் கடைசி 10 நாட்களில் வருகிறது என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். கடைசி 10 நாட்களில் மட்டும் இபாதத் செய்வது லைலத்துல் கத்ரை காண்பதற்கு காரணமாக அமைந்து விடுவதில்லை. மாறாக, மனிதன் தன்னுடைய பிறப்பின் நோக்கத்தை

கவனத்தில் கொண்டு இறைவனிடம் லைலத்துல் கத்ரைப் பெற முயற்சி செய்தால், இறைவன் தான் விரும்புபவர்களுக்கு தன்னுடைய சிறப்பான அருளால் தன்னுடைய வல்லமையை வெளிப்படுத்துவதற்காக ஒரு ஆன்மீக சூழ்நிலையை உருவாக்குகிறான். ஒரு சிறந்த நிலையை ஏற்படுத்துகிறான். இதன் மூலம் இறைவனின் அடியார்களுக்கு இந்த கண்ணியத்திற்குரிய இரவு கிடைத்து விடுகிறது. இதனால் இறை அடியார் ஒரு அற்புதமான ஆன்மீக சூழலை உணர்கிறார். எனவே இறைவனின் அடியாராக இருக்கின்றவர் இறைவனிடம் தாம் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றும் போது அவருடைய ஒவ்வொரு செயலிலும் ஆன்மீக முன்னேற்றம் தென்படுகிறது. ரமலானின் நோன்புகள், திருக்குர்ஆனை ஓதுதல், மற்றும் இறைவணக்கங்களை நேர்த்தியாக நிறைவேற்றுவது ஆகியவை இறைவனுடைய அடிமை என்ற மனிதனின் நிலையை இன்னும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கையுடன் உயர்ந்த தகுதிகளைப் பெறுவதற்கு கடின உழைப்பு மற்றும் விடா முயற்சியில் மனிதன் ஈடுபடுகின்ற போது தனது அடியார்களின் மீது எல்லையில்லா கருணை காட்டுபவனும் தனது வாக்குறுதிகளில் உண்மையானனும் ஆகிய இறைவன் தன்னுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறான். இறைவன் தனது அடியார்களின் மீது மிகுந்த கருணையாளன் ஆவான். மனிதன் தனது எல்லாவிதமான திறன்களையும் கொண்டு துஆ செய்பவரின் துஆவை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று நான் கூறியதால் என்னிடம் துஆ செய்கிறார். என்னை வணங்குகிறார். எனவே நான் அவருக்கு ரமலான் மாதத்தில் லைலத்துல் கத்ர் என்ற இரவைக் காட்டுவேன் என்று இறைவன் கூறுகிறான். வானத்திலிருந்து இறங்கி வந்து இறைவன் தன்னுடைய நெருக்கத்தை மனிதனுக்கு வழங்குகிறான். அப்போது இறைவன் இன்று இரவு நீங்கள் என்னிடம் துஆ செய்தால் அதை நான் ஏற்றுக் கொள்வேன் என்று கூறுகிறான். எனவே மனிதன் தனது வாக்குறுதியையும், கடமையையும் நிறைவேற்றும் போது இறைவன் மனிதனின் துஆவை ஏற்றுக் கொள்கிறான். மேலும் ஆன்மீக முன்னேற்றங்களை வழங்குகிறான். நமது இறைவன் நிச்சயமாக உண்மையான வாக்குறுதிகளை வழங்கும் இறைவன் ஆவான். ஏதாவது குறைபாடு இருக்கிறது என்றால் அது நமது செயல்களிலும் நமது முயற்சிகளிலும் தான் குறைபாடு இருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் ரமலான் மாதத்தை நமக்கு வழங்கி அதில் இந்த பத்து நாட்களையும் தந்து அதிலும் ஒரு லைலத்துல் கத்ர் என்ற இரவை வழங்கி இறைவன் நம்மீது அளவற்ற அருள் புரிந்துள்ளான். இந்த இரவு இறைவனின் நெருக்கம் மனிதனுக்கு கிடைக்கும் இரவாகும். எனவே மனிதன் இந்த இரவில் இறை நெருக்கத்தைப் பெறுவதற்கு எவ்வளவு கடினமாக உழைக்க வேண்டும். இந்த ஒரு இரவு ஒருவருக்கு கிடைத்து விட்டால் அவருக்கு இறைவனின் முன்னிலையில் உயர்ந்த அந்தஸ்து கிடைக்கிறது. இதில் இபாதத் செய்பவர் முழு வாழ்நாளும் இபாதத் செய்ததற்குச் சமமான ஒரு அந்தஸ்தைப் பெறுகிறார். அதாவது இந்த ஒரு இரவு அவருடைய வாழ்க்கையை தலைகீழாக மாற்றி விடுகிறது. இதன் பிறகு அவருடைய வாழ்க்கை முன்னரைப் போன்று இருப்பதில்லை. இவ்வாறு வாழ்வில் ஒரு புதிய மாற்றம் உருவாக வேண்டும். இல்லையென்றால், இந்த இரவின் உரிமை நிறைவேறாது. பொதுவாக ஒரு முஃமினுடைய ஆன்மீக நிலை எப்போதும் முன்னேற்றத்தின் பக்கம் போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

இப்போது ஒருவர் தனக்கு லைலத்துல் கத்ர் கிடைத்து விட்டது. இந்த ஒரு இரவு இபாதத் செய்வது 1000 மாதங்கள் இபாதத் செய்வதை விட சிறந்ததாகும். எனவே நான் இனிமேல் இறைவனை வணங்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறினால் அவர் பொய்யர் ஆவார். இறைவனுடைய நேசம் என்பது மனிதனை முன்பை விட அதிகமாக இறை கட்டளைகளை பேணக் கூடியவனாகவும், இறைவனின் அடியானாகவும் மாற்றுகிறது. எனவே இந்த நிலை ஏற்பட்டு விட்டால் இறைவனின் நிரந்தரமான அருள் இறங்க ஆரம்பித்து விடுகிறது. பிறகு நான் உங்கள் துஆக்களை கேட்டேன். நீங்கள் என்னை அடைவதற்கு கடினமாக உழைத்தீர்கள். என்னிடம் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றியுள்ளீர்கள். எனவே நானும் உங்களுக்கு அதிகமாக வழங்குவேன் என்று இறைவன் கூறுகிறான்.

அதாவது, மனிதன் ரமலான் மாதத்தில் தன்னுடைய ஆன்மீக நிலையை உயர்த்துவதற்கு முயற்சி செய்தால் இறைவன் லைலத்துல் கத்ரை காட்டி தன்னுடைய நெருக்கத்தை வழங்கிக் கொண்டே இருப்பான். முஃமின் லைலத்துல் கத்ரின் தத்துவத்தை முழுமையாகப் புரிந்து கொள்வதற்காக ஓரிடத்தில் **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

லைலத்துல் கத்ர் என்பது மனிதனுடைய முழுமையான தூய்மைக்குரிய ஒன்றாகும். இதைப் பெற்ற ஒருவர் இறைவனின் கட்டளைகளைப் பேணி நடப்பவர் ஆகின்றார். எனவே இந்த நிலையை அடைவதற்கு முயற்சி செய்தால் லைலத்துல் கத்ரின் அருள்கள் கிடைக்கும். ரமலான் மாதம் இப்படிப்பட்ட ஒரு புரட்சியைத்தான் ஏற்படுத்த உள்ளது. நாம் இதை மதித்தால் லைலத்துல் கத்ரைப் பெறலாம். அப்போது நாம் இறைவனின் விருப்பத்தைப் பெற்றவர்களாக ஆகலாம்.

முன்னதாக நான் ஒரு ஹதீஸை சுட்டிக் காட்டினேன். அதாவது ரமலானின் கடைசி 10 நாட்களில் லைலத்துல் கத்ரைத் தேடுங்கள் என்ற கருத்து அதில் காணப்பட்டது. இன்னும் இது சம்பந்தமான சில ஹதீஸ்களை நான் கூறுகிறேன். இந்த ஹதீஸ்களின் மூலம் இந்த 10 நாட்களின் முக்கியத்துவம் மற்றும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இந்த 10 நாட்களில் செய்த சிறப்பான ஈடுபாடு ஆகியவை தெரிய வருகிறது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்கிறார்கள்: ரமலானின் இறுதிப் பத்து நாட்கள் வந்து விட்டால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது இடுப்பை இறுக்கிக் கொள்வார்கள். இரவு முழுவதும் கண்விழிப்பார்கள். அதாவது மிகக் குறைவாகவே உறங்குவார்கள். வீட்டில் உள்ளவர்களையும் எழுப்புவார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ரமலானின் கடைசி 10 நாட்களில் தாம் செய்து வந்த இறை வணக்கத்தை அதிகமாக்கியது மட்டுமின்றி வீட்டில் உள்ளவர்களையும் எழுப்பினார்கள் என்று இந்த ஹதீஸிலிருந்து தெரிகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பொதுவான நாட்களிலும் தொழுத நீண்ட தொழுகை மற்றும் அழகு ஆகியவற்றை எடுத்துச் சொல்ல வார்த்தைகள் இல்லை என்று இன்னோரிடத்தில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். இவ்வாறு பொதுவான பிற நாட்களில் இபாதத்தில் சிறந்து விளங்கிய ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது நிலை இந்த 10 நாட்களில் எவ்வாறு இருந்திருக்கும்? இதை நம்மால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. அது மட்டுமல்ல. இறைவன் புறமிருந்து கிடைத்த அருட்கொடை மற்றும் அளவில்லாத கருணை ஆகியவற்றை எல்லாரையும் விட அதிகமாக ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தான் புரிந்து கொண்டார்கள். குறிப்பாக இந்த 10 நாட்களில் இறைவனின் அருட்கொடைகள் மழை போல் பொழியும். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வீட்டினர் இந்த சிறப்பான அருட்கொடையிலிருந்து விலகியிருக்க ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எவ்வாறு விட்டிருப்பார்கள்? எனவே குடும்பத்தாரையும் எழுப்பினார்கள். பின்பு அவர்களுக்கு கிடைத்திருக்கும் அந்த ஆன்மீக நிலை எவ்வளவு உயர்ந்ததாக இருந்திருக்கும்! அதை நம்மால் எண்ணிக் கூட பார்க்க முடியாது.

ஆக, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இந்த முன்மாதிரியை நமக்காக நிலைநாட்டினார்கள். நாமும் நம்மிடமும், நமது குடும்பத்தாரிடமும் இந்த முன்மாதிரியைப் பேணி நடக்கும் நல்வாய்ப்பை இறைவன் வழங்குவானாக. இந்த நிலையை நாம் நம்மிடம் உருவாக்கினால் நமது பாவங்கள் மன்னிக்கப்படவும் தகுதியுடையவர்கள் ஆவோம். இது தொடர்பான இன்னும் ஒரு சில ஹதீஸ்களை எடுத்துரைக்கிறேன்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஈமானின் தாக்கத்தால் இறைவனின் விருப்பத்தைத் தேடி ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும். மேலும் லைலத்துல் கத்ரின் போது ஈமானின் தூண்டுதலால் நோன்பு நோற்று அல்லாஹ்வின் விருப்பத்தைத் தேடுபவரது முந்தைய பாவங்கள் யாவும் மன்னிக்கப்படும்.

இதே போன்று இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஈமானின் உறுதியும் இறைவனின் விருப்பத்தைத் தேடுவதும் ரமலானில் நோன்பு நோற்பதின் நிபந்தனையாகும். இல்லையென்றால் யாரும் பட்டினி கிடப்பதால் இறைவனுக்கு எந்த அவசியமும் இல்லை. அதே போன்று இறைவனின் விருப்பத்தைத் தேடுவது லைலத்துல் கத்ரின் நிபந்தனையாகும். தூய்மையான உள்ளத்தோடு இறைவிருப்பத்தைத் தேட வேண்டும். வெறுமனே உலக ஆதாயத்திற்காக லைலத்துல் கத்ரை தேடக் கூடாது. லைலத்துல் கத்ர் எனக்கு கிடைத்து விட்டால் நான் இவ்வாறு துஆ செய்வேன். பிறகு என்னுடைய உலக நோக்கம் நிறைவேறி விடும் என்பது குறிக்கோள் அல்ல. மாறாக நன்மைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நமது துஆக்களிலேயே முதன்மையானது அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்கான துஆவாகும். இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஓரிடத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்கு இவ்வாறு கவனமூட்டியுள்ளார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதை நீங்கள் கடைசி பத்து இரவுகளில் தேடுங்கள். உங்களில் யாராவது பலவீனமாகி விட்டாலோ அல்லது தோல்வியுற்றாலோ கடைசி ஏழு இரவுகளில் தேடுங்கள். ஒருபோதும் பலவீனம் காட்டக் கூடாது என்று ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பாருங்கள். லைலத்துல் கத்ருக்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் தந்துள்ளார்கள். ஆக, நம்மில் யாராவது ரமலானிலிருந்து ஏதாவதொரு காரணத்தால் பலன் பெற முடியாவிட்டால் நாம் ஒரு உண்மையான அடியாராகவும், உண்மையான முஃமினாகவும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த கடைசி 10 நாட்களில் அல்லது கடைசி ஏழு நாட்களில் எல்லா சாக்குப்போக்கு களையும் தூர ஒதுக்கிவிட வேண்டும். இபாதத் செய்வதற்கான அசல் குறிக்கோளை, அதற்குரிய உரிமையின் அடிப்படையில் நிறைவேற்றியவாறு இரவுகளை கழிக்க வேண்டும். இதற்கான முன்மாதிரியை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நம்முன் நிலைநாட்டியுள்ளார்கள். இந்த முயற்சிகள் தான் உங்களுடைய ஆன்மீக முன்னேற்றங்களுக்கு காரணமாக அமையும். இதுவே இறைவனின் நெருக்கத்தை தருவதற்கு காரணமாக அமையும்.

இன்னொரு அறிவிப்பில் சாலிப் பின் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது தந்தையார் இவ்வாறு கூறினார். நான் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் லைலத்துல் கத்ரைப் பற்றி இவ்வாறு கூறியதாகக் கேட்டேன். உங்களுள் சிலருக்கு லைலத்துல் கத்ர் கடைசி 10 நாட்களின் முதல் ஏழு நாட்களுள் காட்டப்பட்டது. இன்னும் சிலருக்கு கடைசி ஏழு நாட்களில் காட்டப்பட்டது.

எனவே இதற்கு முன்னதாக நான் கூறிய ஹதீஸில் இதற்கு விளக்கம் வந்துள்ளது. கடைசி ஏழு நாட்களில் அல்ல. மாறாக கடைசி 10 நாட்களில் லைலத்துல் கத்ர் காட்டப்பட்டது. இது ஒரு குறிப்பிட்ட நாள் அல்ல. மாறாக கடைசி 10 நாட்களில் ஏதாவது ஒரு நாள் காட்டப்பட்டுள்ளது. ஒற்றைப்படை இரவுகளில் தேட வேண்டும் என்றும் ஹதீஸ்களில் அறிவிப்புகள் காணப்படுகின்றன. எவ்வாறிருப்பினும், லைலத்துல் கத்ரை காண்பவருக்கு அல்லாஹ்வின் சிறப்பான அருள் கிடைக்கிறது. லைலத்துல் கத்ரை கண்ட பிறகு அதை நாம் கண்ணியப்படுத்த வேண்டும். மதிக்க வேண்டும். இவ்வாறு லைலத்துல் கத்ர் கிடைத்துக் கொண்டிருந்தால் மனித வாழ்க்கையில் ஆன்மீக முன்னேற்றமும், நல்ல மாற்றமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும்.

நான் எடுத்துக் கூறியுள்ள இவ்விஷயங்கள் அனைத்தும் லைலத்துல் கத்ர் தொடர்பான ஒரு சில விஷயங்கள் மட்டுமே ஆகும். இது லைலத்துல் கத்ர் தொடர்பாக ஹதீஸ்களில் நாம் காண்பவையாகும். **ரமலானின் கடைசி 10 நாட்களின் வருகின்ற ஒற்றைப்படை இரவுகளில் ஒரு இரவு இறைவனின் அருளைக் கொண்டதாக இருக்கிறது. இதுவே லைலத்துல் கத்ர் என்று அழைக்கப்படுகிறது** என்பதை நாம் இதுவரை பார்த்தோம். இது தொடர்பான திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

முன்னதாக நான் ஓதிய திருக்குர்ஆனின் சூரா அல்லைல் வசனத்தில் இந்த இரவு ஆயிரம் மாதங்களை விட சிறந்தது என்று இறைவன் கூறுகிறான். ஆயிரம் மாதங்கள் ஏறக்குறைய 83 வருடங்களுக்கும் மேலான காலகட்டமாகும். அதாவது இந்த ஓர் இரவு ஒருவருக்கு கிடைத்து விட்டால் அவர் தனது வாழ்நாள் முழுவதும் செய்த துஆக்களில் இறைவனின் பார்வையில் அவருடைய நன்மைக்காக செய்த துஆக்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மனிதன் பல துஆக்களை செய்கிறான். ஆனால் அவை எல்லாம் இறைவனின் பார்வையில் நல்ல துஆக்களாக இருப்பதில்லை. முஃமின் அல்லாஹ்வின் முன்னால் தூய்மையான உள்ளத்தோடு குனியும் போது இறைவன் முஃமினுடைய நலனைக் கருதி அவர் செய்த துஆக்களை ஏற்றுக் கொள்கிறான். இந்த நிலையை ஒரு முஃமின் அடைந்து விட்டால் அது அவருடைய ஆன்மீக நிலையை உயர்த்தி விடுகிறது. அவருக்கு இறைவனோடு உள்ள தொடர்பில் மலக்குகள் இறங்குவதால் ஒரு புரட்சி ஏற்படுகிறது. பிறகு அந்த இரவு அவர் செய்கின்ற இறைவணக்கம் முழு வாழ்நாளும் அவர் இறைவணக்கம் செய்வதற்கு சமமாகி விடுகிறது. ஏனென்றால் அவர் இதன் மூலம் தனது பிறப்பின் நோக்கத்தை அடைந்து விடுகிறார். ஒருமுறை இந்த இரவைக் கண்டவர் ஒவ்வொரு வருடமும் இதைப் பெறுவதற்கு முயற்சியும் தேடலும் உடையவராகிறார். இதனால் அது அவருக்கு தொடர்ந்து கிடைக்க இறைவன் நல்வாய்ப்பு வழங்குகிறான்.

ஈமான் கொண்ட ஒருவரின் வாழ்க்கையில் இந்த இரவுக்கு மிக அதிகமான முக்கியத்துவம் உள்ளது. இதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இன்னும் பல விரிவான பொருளை கூறியுள்ளார்கள். நாம் இதை ஒரு கண்ணியத்திற்குரிய இரவில் இறக்கினோம் (92:2) என்று இறைவன் கூறுகிறான். இறைவன் எதை கண்ணியத்திற்குரிய இரவில் இறக்கினான்? முழுமையான ஷரீஅத்தை இறக்கினான். அதை திருக்குர்ஆனாக இறைவன் இறக்கினான். இதில் திருக்குர்ஆன் ரமலான் மாதத்தில் இறக்கப்பட்டதன் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை இறைவன் ஒரு வசனத்தில் இவ்வாறு கூறுகிறான். ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பட்ட மாதமாகும்.(2:186). மேலும் இந்த ரமலானில் ஒரு இரவு லைலத்துல் கத்ர் என்று அழைக்கப்படுகிறது. இது ஆயிரம் ஆண்டுகளை விட சிறப்பிற்குரியதாகும். ரமலான் மாதத்தில் திருக்குர்ஆன் இறங்க ஆரம்பித்தது. இம்மாதம் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆனில் அதுவரை இறங்கிய வசனங்களை ஓதிக் காட்டுவார்கள். ஒரு முழுமையான நேர்வழி இறங்க வேண்டும் என்ற காலத்தில் தேவை ஏற்பட்ட போது (இது இறங்கியது). ஏனென்றால் அந்தக் காலம் ஒரு இருள் சூழ்ந்த காலமாகும். திருக்குர்ஆனில் இக்கருத்தை இறைவன் இவ்வாறு கூறுகிறான். நிலத்திலும்., கடலிலும் குழப்பம் பரவியது (40:32). இவ்வாறு குழப்பம் நிறைந்த காலகட்டம் ஒரு முழுமையான நேர்வழி வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தது. எனவே இறைவன் அக்காலகட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தனது முழுமையான வேதத்தை இறக்கினான். அந்தக் காலகட்டத்தில் நிறைந்து காணப்பட்ட அளவுக்கு குழப்பமும் இருளும் முன்பு எப்போதும் காணப்பட்டதில்லை. அப்போது காலத்தின் தேவையின் நிமித்தம் இறைவன் இந்த வேதத்தை இறக்கினான். இந்தக் கருத்தை இறைவன் மற்றொரு இடத்தில் இவ்வாறு கூறுகிறான்.

இறைவன் மிகுந்த புகழுக்குரியவனும், மிகுந்த மேன்மைக்குரிவனும் ஆவான். தன் கருத்தைத் தெளிவாக விளக்குகின்ற இவ்வேதத்தின் மேல் ஆணையாக! நிச்சயமாக நாம் இதனை அருளுக்குரிய ஓர் இரவில் இறக்கினோம். நிச்சயமாக நாம் எச்சரிகை செய்தே வருகிறோம். அந்த இரவில் ஒவ்வொரு ஞானம் மிக்க கட்டளையும் திட்டவட்டமாக தீர்மானிக்கப்பட்டது. இது நம் புறமிருந்து வந்த கட்டளையாகும். நிச்சயமாக நாமே தூதர்களை அனுப்புகிறோம். இது உமது இறைவனிடமிருந்து வந்த கருணையாகும். நிச்சயமாக அவன் நன்கு கேட்பவனும், நன்கு அறிபவனும் ஆவான். (44:1-7)

இந்த இரவு மிகுந்த அருளுக்குரியதாகும். இதில் இறைவன் மனிதனின் மீது கருணை காட்டியவாறு மிகவும் வெளிப்படையான, விளக்கமான, தெளிவான, பிரகாசமான நேர்வழியால் நிரம்பிய வேதநூலை வழங்கினான். மனிதனுக்கு நேர்வழி கிடைக்க வேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருந்த ரஸூல் (ஸல்) அவர்கள் மீது இறக்கினான். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மனிதன் சிலைகளை வணங்குவதற்கு பதிலாக இறைவனை வணங்க வேண்டும் என்றே நினைத்தார்கள். மேலும் ஒரு சாதாரண மனிதரை இறைவனுடைய மகன் என்று எண்ணி அவருடைய மரணம் தான் உண்மையான ஈடேற்றத்திற்கான வழி என்று நம்புவதற்குப் பதிலாக இறைவன் ஈடிணையற்றவன் ஆவான். அவன் தேவைகளற்றவன் ஆவான் என்று மனிதன் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். மேலும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மனிதன் அநீதியிலிருந்து விலக வேண்டும் என்று விரும்பினார்கள். இறை அடியார்களுக்கு செய்ய வேண்டிய சேவையை, உரிமையை நிறைவேற்றுகின்ற அதே வேளையில் அல்லாஹ்வின் உரிமையையும் நிறைவேற்ற வேண்டும். இதற்காக துஆ செய்த ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவ்களின் துஆக்களை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு முழுமையான ஷரீஅத்தை இறக்கினான். இந்த ஷரீஅத் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு காணப்பட்ட இருளை போக்குவதற்கு மட்டும் காரணமாக அமையவில்லை. மாறாக கியாம் நாள் வரைக்கும் தோன்றவிருக்கின்ற இருள்கள் அனைத்தையும் போக்குவதற்கும் இதுவே காரணமாக அமைந்துள்ளது. இந்த ரஸூல் கியாமத் வரை காத்தமுல் அன்பியாவாகவும், முழுமையான ஷரீஅத்தைக் கொண்ட நபியாகவும் திகழ்வார்கள்.

காலத்தின் இருளைப் பார்த்து இறை அடியார்கள் எப்போதெல்லாம் இறை சந்நிதானத்தில் சிரம் பணிவார்களோ அப்போதெல்லாம் நன்கு கேட்பவனும் நன்கு அறிந்தவனுமாகிய இறைவன் தனது நல்லடியார்களுக்கு ஆறுதல் அளிக்க தனது சிறப்பான ஏற்பாட்டைச் செய்கிறான். அவ்வாறே

இக்காலகட்டத்தில் இறைவன் தனது வாக்குறுதிக்கேற்பவும் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவும் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் உண்மை நேசரை அன்னாரின் அடிமையாக அனுப்பினான். இந்த உண்மை நல்லடியாரும் மஸீஹும் மஹ்தியுமாக தோன்றியவர் ஓரிடத்தில் லைலத்துல் கதர் –க்கு விளக்கம் தந்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சூரா கத்ர் –ன் பொருளை சிந்திக்கும் போது தென்படுகின்ற மிகவும் நுட்பமான ஞானம் என்னவென்றால், இறைவன் இந்த சூராவில் மிகவும் தெளிவாக கூறுகிறான். வானத்திலிருந்து பூமிக்கு சீர்திருத்தவாதி தோன்றும் போதெல்லாம் அவரோடு வானவர்கள வானத்திலிருந்நரு இறங்குகின்றார்கள். அந்த வானவர்கள் பூமியெங்கும் காணப்படுகின்ற தூய்மையானவர்களை சத்தியத்தின்பால் இழுத்து வருகின்றனர். ஆக இந்த வசனங்களின் கருத்திலிருந்து புதிய பலன் கிடைக்கிறது  கடுமையான வழிகேடு மற்றும் கவனமின்மை அதிகமாக உள்ள காலகட்டத்தில் திடீரென்று அற்புதமான முறையில் மனிதர்களின் ஆற்றல்களில் தானாகவே மார்க்கத்தின்பால் தேடுதல் உருவாக ஆரம்பித்தால், ஒரு சீர்திருத்தவாதி வானத்திலிருந்து பிறந்துள்ளார் என்பதற்கு இது அடையாளம் ஆகும். ஏனென்றால் வானவர்களின் வருகை இல்லாமல் மனிதனிடம் மார்க்க ஈடுபாடு பிறக்க முடியாது. இந்த ஈடுபாடு மற்றும் ஊக்கம் ஆகியவை திறன்கள் மற்றும் மனிதனின் தனிப்பட்ட இயல்பு ஆகியவையின் அடிப்படையில் இரண்டு வகைப்படுகிறது.

1) ஹர்க்கத்தே தாம்மா – முழுமையான ஊக்கம்  2) ஹர்கத்தே நாகிஸா – பலவீனமான ஊக்கம்

ஆன்மாவிற்கு தூய்மையும் வலிமையும் வழங்கி அறிவை கூர்மையாக்குவது ஹர்கத்தே தாம்மா ஆகும். வானவர்களின் தூண்டுதலால் அறிவு மற்றும் புரியும் தன்மை கூர்மையாகி விடுகிறது. ஆனால் அமைதியின்மையின் காரணமாகவும், திறன் குறைவு காரணமாகவும் வெற்றி அடைய முடியாது. இதனால் அவர்களின் உள்ளங்களில் நோய் இருந்தது. அவன் அதை அதிகப்படுத்தி விட்டான் என்ற வசனத்தை உண்மைப்படுத்துபவர் ஆகி விட்டான். அதாவது அறிவு மற்றும் தத்துவத்தைப் பின்பற்றுவதால் மனிதனுடைய நிலை முன்பை விட மிகவும் மோசமாகி விடுகிறது. எல்லா நபிமார்கள் வரும்போதும் மலக்குகள் இறங்கினர். மலக்குகள் ஏற்படுத்திய தூண்டுதலின் மூலம் எல்லா இயல்பு கொண்டவர்களும் செயல்பட ஆரம்பித்தனர். அப்போது நல்லியல்பு கொண்டவர்கள் நபிமார்களின் பக்கம் இழுத்து வரப்பட்டனர். ஷைத்தானின் இயல்பு கொண்டவர்கள் மலக்குகளின் தூண்டுதலால் விழிப்புணர்பு பெற்றனர். மார்க்கத்தின்பால் கவனமும் செலுத்தினர்.  ஆனால் இழப்பின் காரணமாக அவர்கள் சத்தியத்தை அடையவில்லை. ஆக இறைவன் புறமிருந்து வருகின்ற நபிமார்களுடன் மலக்குகளும் இறங்குவார்கள். அவர்கள் எல்லா மனிதர்களின் உள்ளத்திலும் சமமாகவே செயல்படுகிறார்கள்.  இதனால் நல்லவர்களிடம் நல்ல விளைவும் தீயவர்களிடம் தீய விளைவும் ஏற்படுகிறது. இந்த வசனத்தில் அவர்களின் உள்ளங்களில் நோய் இருந்தது; அவன் அதை வளர்த்து விட்டான்  என்ற வசனத்தில் இந்த பல்வேறு விளைவுகளைப் பற்றி தான் இறைவன் கூறுகிறான். ஒவ்வொரு நபியின் வருகையின் காலகட்டமும் ஒரு லைலத்துல் கத்ர் ஆகும். அவருக்கு வழங்கப்படுகின்ற வேத நூல் வானத்திலிருந்து இறக்கப்படுகிறது. வானவர்கள் வானத்திலிருந்து இறங்குகிறார்கள். மிகப்பெரிய லைலத்துல் கத்ர் நமது நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட லைலத்துல் கத்ர் ஆகும். உண்மையில் இந்த லைலத்துல் கத்ர் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் காலம் முதல் கியாமத் நாள் வரை நீண்டுள்ளது. மனிதனிடம் ஏற்படுகின்ற ஆன்மீக கவனம் மற்றும் ஈடுபாடு ஆகியவை ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் லைலத்துல் கத்ரின் விளைவே ஆகும். இதில் உள்ள வேறுபாடு, நல்லவர்களின் உள்ளத்தில் இந்த உணர்வு முழுமையாகவும் நிரந்தரமாகவும் இருக்கிறது. சந்தேகம் கொள்பவர்களின் அறிவு, உணர்வு ஒரு கோணலை உடையதாகவும் நிரந்தரமாகவும் வெளிப்படுகிறது.  ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் நாயிப் ஆக உதவியாளராக உலகில் யாராவது பிறந்தால் இந்த உணர்வுகளும், தூண்டுதல்களும் மிகவும் வேகமாக தமது பணியை செய்கின்றன.  ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் உதவியாளர் கர்பத்தில் இருக்கும் போது மனித திறன்களில் சின்னச்சின்ன ஊக்கங்கள் ஏற்படுகின்றன.  பிறகு மெல்ல அது செயல்பட ஆரம்பிக்கின்றது. ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் நாயிப், உதவியாளர் என்ற பதவியைப் பெறும்போது இந்த தூண்டுதலும் ஊக்கமும் மிகவும் வேகமடைகிறது. ஆக ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களுடைய உதவியாளர் தோன்றும்

காலகட்டமும் ஒரு லைலத்துல் கத்ரின் காலகட்டமாகும். இந்த லைலத்துல் கத்ரானது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த லைலத்துல் கத்ரின் ஒரு கிளையாகும். அல்லது அதன் நிழல் ஆகும். இறைவன் இந்த லைலத்துல் கத்ரின் மகத்துவத்தை மிகவும் அதிகமாக உயர்த்தியுள்ளான். இதன் மகத்துவத்தை பறைசாற்றும் திருக்குர்ஆன் வசனம் ஒன்றும் உள்ளது. அந்த இரவில் ஒவ்வொரு ஞானம் மிகுந்த கட்டளையும் திட்டவட்டமாக தீர்மானிக்கப்படுகிறது.(44:5)

அதாவது கியாமத் நாள் வரைக்கும் நீண்டுள்ள இந்த லைலத்துல் கத்ரில் ஞானம் மிகுந்த விஷயங்கள் யாவும் உலகில் பரப்பப்படும். எங்குமே கிடைக்காத அற்புத அறிவு மற்றும் அழிந்துபோன ஞானங்கள் மற்றும் அற்புதமான புகமுரைகள் யாவும் முழு உலகிலும் பரப்பப்படும். மனித திறன்களில் ஒளிந்துள்ள பல்வேறு சக்திகள், அறவுத் திறன்கள் எவ்வளவு தூரம் வளர முடியுமோ அவ்வளவு வளர்க்கப்படும். இவை அனைத்தும் இந்நாட்களல் மிகுந்த உத்வேகத்துடன் நடந்து கொண்டே இருக்கும். அப்போது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் நாயிப், உதவியாளர் உலகில் தோன்றுவார். உண்மையில் இந்த வசனத்தைத்தான் சூரா ஸில் ஸாலில் விளக்கமாக கூறப்பட்டுள்ளது. ஏனெனில் சூரா ஸில் ஸாலுக்கு முன்னர் சூரா அல் கத்ர் உள்ளது. இதன் மூலம் விளக்கப்பட்டுள்ளது என்னவென்றால், இறைவனின் வேதம் லைலத்துல் கத்ரில் தான் இறங்குகிறது. இதுவே இறைவனின் நடைமுறையாகும். நபி எப்போதும் லைலத்துல் கத்ரில் தான் உலகத்தில் தோன்றுவார். லைலத்துல் கத்ரில் தான் வானவர்கள் வானத்திலிருந்து இறங்குகிறார்கள். அவர்களின் ஊக்கத்தின் காரணமாக உலகத்தில் நன்மையின் பக்கம் நாட்டம் ஏற்படுகிறது. இருள் நிறைந்த இரவில் ஆரம்பித்து அதிகாலை விடியல் பொழுது வரை இவ்வாறு நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது பல்வேறு நாட்களில் பல இடங்களில் கூறியுள்ள அழகான விளக்கமாகும். இது ஒரு முன்மாதரியாகும். உலகிற்கு இது புரிந்து விட்டால், குறிப்பாக முஸ்லிம்கள் இதை புரிந்து கொண்டால் இறைவனின் இந்த நல்லடியாரை எதிர்ப்பதற்குப் பதிலாக அவருக்கு உதவி செய்பவர்களாகி விடுவர். இங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொடுத்துள்ள ஆதாரம் மிகவும் வலிமைவாய்ந்த ஆதாரமாகும். தமக்கு நிம்மதியும் அமையும். வேண்டுமென்றே முழக்கம் இடுகின்றவர்களின் கவனத்தை இது ஈர்ப்பதற்கு காரணமாக அமைய வேண்டும். இக்காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டவாறு ஒரு சீர்திருத்தவாதி வருவது அவசியமாகும் என்றும், ஹதீஸில் கூறப்பட்டுள்ள அடையாளங்களின் படி ஒரு மஹ்தி வர வேண்டும் என்றும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் மஸீஹ் மவ்வூது (லை) அவர்களின் இந்த வாசகங்களை கவனத்துடன் படிக்க வேண்டும்.

நான் வாசித்தவர்களின் ஒரு வரியை மீண்டும் வாசித்துக் காட்டுகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

கடுமையான வழிகேடு மற்றும் கவனமின்மை அதிகமாக உள்ள காலகட்டத்தில் திடீரென்று அற்புதமான முறையில் மனிதர்களின் ஆற்றல்களில் தானாகவே மார்க்கத்தின்பால் தேடுதல் உருவாக ஆரம்பித்தால், ஒரு சீர்திருத்தவாதி வானத்திலிருந்து பிறந்துள்ளார் என்பதற்கு இது அடையாளமாகும். ஏனென்றால் வானவர்களின் வருகை இல்லாமல் மனிதனிடம் மார்க்க ஈடுபாடு பிறக்க முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் வாழ்ந்த ஆலிம்கள் மற்றும் சான்றோர்களின் நூல்களைப் படித்துப் பாருங்கள். அனைவருமே ஒரு சீர்திருத்தவாதியை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். மஸீஹ் மற்றும் மஹ்தி தோன்ற வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்த பிறகு இவர்களிலே ஒரு பிரிவினர் எதிர்ப்பில் முன்னேறினர். இன்னும் பலர் தமது இம்மை மற்றும் மறுமை வாழ்வை சீர்செய்து கொண்டனர். இன்று வரை உலகில் ஒரு நிம்மதியற்ற சூழ்நிலை நிலவி வருகிறது. பல்வேறு இடங்களில் செய்தித்தாள்களிலும் ஒரு சீர்திருத்தவாதி வர வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்து எழுதி வருகிறார்கள். சிலர் மஸீஹின் வருகை அவசியம் என்று கூறுகிறார்கள். சிலர் கிலாஃபத் அவசியம் என்று எழுதுகிறார்கள். மஸீஹ் மவ்வூது வராமல் கிலாஃபத் எவ்வாறு நிலைபெற முடியும்? ஆக இப்போது மக்கள் கூறி வருகின்ற இந்த கருத்துக்கள் யாவும் இறைவன் புறமிருந்து ஒரு சீர்திருத்தவாதி வர வேண்டும் என்று அவர்கள் அனைவரும் எதிர்பார்ப்பதை குறிக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ்

மவ்வூது (அலை) அவர்கள் இந்த தேடுதலைத் தான் இங்கு ஆதாரமாகக் காட்டுகிறார்கள். மக்கள் மத்தியில் காணப்படுகின்ற இந்த ஆர்வமும் ஊக்கமும் வானத்திலிருந்து ஒருவர் பிறந்து விட்டார் என்பதை குறிக்கிறது என்கிறார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:**

இறைவன் புறமிருந்து ஒருவர் வரும்போது இரண்டு வகையான தூண்டுதல் பிறக்கிறது. ஒன்று ஹர்கத்தே தாம்மா (முழுமையான தூண்டுதல்), இரண்டாவது ஹர்கதே நாகிஸா (பலவீனமான தூண்டுதல்) ஆகும். இதில் கூறப்பட்டுள்ள ஹர்கதே தாம்மாவின் மூலம் ஆன்மா தூய்மை அடைகிறது. இறைவனிடம் நேர்வழியைத் தேடி துஆ எழுகிறது. அதற்கு இறைவன் நேர்வழியைக் காட்டுகிறான். மனிதன் பகுத்தறிவைப் பயன்படுத்தி சத்தியத்தை உணர்ந்து கொள்கிறான். சில நேரம் அடையாளங்கள் வெளிப்படுகின்றன. அதைப் பார்த்து சத்தியத்தை தெரிந்து கொள்ளலாம். சில நல்ல பாக்கியம் பெற்ற ஆன்மாக்களுக்கு இறைவனே நேர்வழியைக் காட்டுகிறான். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் காலத்தில் இதுபோன்ற நேர்மையான உள்ளம் கொண்டவர்கள் தாமாகவே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை அடையாளம் கண்டு கொண்டார்கள். அவர்கள் உள்ளத்தின் உணர்வுகளை சரியான பாதையில் இட்டுச் சென்றனர். அபூஜஹில் போன்றவர்கள் தம்மை பெரிய புத்திசாலிகள் என்று நினைத்துக் கொண்டனர். இதன் காரணமாக அவர்கள் அழிந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலகட்டத்தில் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீது (ரலி) அவர்கள் ஆகிய மேன்மைக்குரியவர்கள் தூரத்தில் வசித்து வந்தவர்கள் ஆவர். ஆனால் எல்லா விதமான தூரத்தையும் கடந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன் வந்து ஆஜர் ஆகிவிட்டார்கள். ஆனால் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி மற்றும் இவரைப் போன்றவர்கள் அருகிலேயே வசித்து வந்தார்கள். சிறு வயதிலிருந்தே நண்பர்கள் ஆவர். இவர்கள் எதிர்த்தன் காரணமாக பாக்கியமற்றவர்களாக ஆகி விட்டார்கள். இவ்வாறு பாக்கியமற்ற மனிதர்களைப் பார்த்து **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நேர்மையான திறன் இன்மையின் காரணமாக இவர்கள் அமைதியினைப் பெறுவதில்லை. இவர்களின் ஆன்மாக்கள் நன்மையையும், சத்தியத்தையும் ஏற்றுக் கொள்வதற்கான திறனற்றதாக இருக்கிறது. இவர்களுடைய உள்ளம் கோணலாக இருக்கும். இவர்களது உள்ளத்தில் ஆணவம் இருக்கும். சுயநலம் காணப்படும். எனவே இறைவன் இவர்களுக்கு உதவி செய்வதில்லை. இவர்களின் நோய் வளர்ந்து கொண்டே போகும். இவர்களின் உள்ளம் நேர்மையான வழியில் செல்வதற்குப் பதிலாக எதிராக செல்கிறது. இந்த எதிர் வழியில் நடந்ததன் காரணமாக இவர்களின் ஆன்மீக நிலை முன்பை விட மோசமடைந்து விடுகிறது.

இன்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நிராகரிப்பவர்களின் நிலை இதுதான். இவர்கள் நன்மையை போதித்துக் கொண்டே இருந்தாலும் இவர்களின் போதனைக்கு எந்த விளைவும் ஏற்படாது. ஏன் விளைவு ஏற்படுவதில்லை? ஏனென்றால் அவர்கள் இறைவனின் மஸீஹை நிராகரிக்கின்றர். இவர்களின் நிராகரிப்பிற்கு நிகராக இறைவனின் தக்தீர் செயல்பட ஆரம்பித்து விடுகிறது. அவர்களின் எதிர்ப்பின் காரணமாக அவர்களின் நாவுகளில் இருந்து வரும் சொற்களுக்கு எந்த விளைவும் ஏற்படுவதில்லை. அவர்களுடைய பேச்சில் ஆன்மீகம் இருப்பதில்லை. எந்தவித ஆதாரமும் அடிப்படையும் இருப்பதில்லை. அல் ஃபஸ்ல் என்ற பத்திரிகையில் அரபிகளைப் பற்றி தாஹிர் ஹாமி சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள். இவர் இறைவனின் மிக்க நல்ல உழைப்பாளி ஆவார். வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார். இவர் அரபு நாட்டைச் சார்ந்தவர் ஆவார். இவர் அஹ்மதியத்தை எவ்வாறு ஏற்றுக் கொண்டார் என்ற சம்பவத்தை தாமே இந்தப் பத்திரிகையில் எழுதி வருகிறார்கள். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன் நான் இதை எதிர்ப்பதற்கு எல்லா வகையிலும் முயற்சி செய்தேன். இதற்காக எல்லா திட்டங்களையும் செயல்படுத்தினேன். ஒரு நூலைப் படித்த பின் ஆதாரம் வேண்டி ஒரு மவ்லவியிடம் சென்றேன். அவர் மிகப் பெரிய ஆலிம் என்று நினைத்தேன். அவர் ஒரே நிமிடத்தில் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதங்களையும் ஜமாஅத்தே அஹ்மதிய்யா எடுத்து வைக்கின்ற ஆதாரங்களையும் தகர்த்து விடுவார் என்று நம்பினேன். ஆக இவ்வாறு நான் அவரிடம் சென்றேன். பல நாட்கள் சென்றேன். அவருக்கு பல நூல்களையும் படிப்பதற்காக கொடுத்தேன். அந்த ஆலிம்

சாஹிப் ஒவ்வொன்றையும் படித்து விட்டு பாருங்கள்; இந்த நூலில் எல்லாம் வீணாக எழுதப்பட்டுள்ளன. அர்த்தமில்லாதவைகளை எழுதியுள்ளார்கள் என்று மட்டுமே கூறுவார். திருக்குர்ஆனிலிருந்தோ ஹதீஸ்களிலிருந்தோ எந்த ஆதாரத்தையும் வைத்ததே இல்லை. மிகப்பெரிய ஆலிம் என்று யாரை நினைத்துக் கொண்டிருந்தாரோ அவர் இதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை. எனவே அவரை விட்டு விட்டார்கள். பிறகு இறைவன் அவர்களுக்கு சத்தியத்தின் பால் வழிகாட்டினான். மார்க்க அறிவு இருந்த போதிலும் மஸீஹ் மவ்வூதின் காலகட்டத்தில் மார்க்க விஷயத்தில் இவர்களிடம் உள்ள எல்லா அறிவும் முடிந்து விடுகிறது. எதிர்ப்பின் காரணமாக இவர்களிடம் ஆன்மீகம் இருப்பதில்லை. ஆன்மீகம் இல்லையென்றால் மார்க்க ஞானமும் இருக்காது. ஏனென்றால் இறை ஞானம் இறையச்சம் கொள்வதால் கிடைக்கிறது. இறைவனிடம் தொடர்பு கொள்வதால் கிடைக்கிறது. அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரை எதிர்த்தால் இறையச்சமும் இருப்பதில்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நேர்மையான உள்ளம் கொண்டவர்கள் இறை நேசரை நோக்கி இழுத்து வரப்படுகின்றனர். ஆனால் ஷய்த்தானின் கவனக் குறைவுகளை கைவிட்டு விட்டனர். ஆனால் அவர்களின் திறனின்மையின் காரணமாக சத்தியத்தை அடைய முடியவில்லை.

இன்றும் நாம் பார்க்கிறோம். மார்க்கத்தின்பால் மக்களுக்கு கவனம் இருக்கிறது. ஆனால் ஒரு வழிகாட்டி இல்லாததன் காரணமாக மார்க்கத்தின் பெயரால் ஷய்த்தானிய செயல்களை செய்கின்றனர். இன்றும் கூட நீங்கள் பார்த்தால் மார்க்கத்தின் பெயரால் குழப்பம் விளைவிக்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதிய மேற்கோளை நான் முன்னதாக உங்களுக்கு வாசித்தேன். இதில் லைலத்துல் கத்ர் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் முக்கியமான விஷயம் ஒன்றை குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது அசல் லைலத்துல் கத்ர் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது. இந்த லைலத்துல் கத்ருக்குரிய காலகட்டம் கியாமத் நாள் வரைக்கும் ஆகும். இதன் விளைவாக நல்ல உள்ளம் கொண்டவர்கள் நேர்வழியைப் பெறுகின்றனர். இன்றும் இந்த லைலத்துல் கத்ரின் அருளால் மக்கள் ஆன்மீகத்தில் முன்னேறுகின்றனர். ஆனால் பாக்கியம் அற்றவர்கள் வழியில் இருந்து விலகியுள்ளனர். அழிவின் குழியில் விழுந்து கொண்டே இருக்கிறார்கள்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த லைலத்துல் கத்ரின் காலகட்டம் அன்னாரது உதவியாளரான மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் மீண்டும் நிழல் வடிவில் நிலைநாட்டப்பட்டது. இக்காலத்தின் லைலத்துல் கத்ரை அடையாளம் காண்பதன் மூலம் நாமும் லைலத்துல் கத்ரை பெற முடியும். மக்களுடைய நிலைகள் மார்க்கத்திற்காக பாடுபடுதல், மார்க்கத்தின் சிறந்த போதனைகளிலிருந்து பலன் பெறுதல், தங்கள் கற்பனையின்படி மார்க்கத்திற்கு சொந்தம் கொண்டாடிக் கொண்டு, குழப்பத்தையும் வன்முறையையும் தூண்டி விடுதல் மற்றும் இக்காலத்தில் புதிய கண்டுபிடிப்புகள் மனிதத் திறமைகளை சீரழிக்க காரணமாக அமைகின்றன. சில கண்டுபிடிப்புகள் முஃமின்களின் நன்மைக்காக உள்ளன. இறை வேதத்தையும், போதனைகளையும் சிறந்த ஞானங்களையும் பரப்புவதற்குக் காரணமாக அமைகின்றன. இவ்வாறு தீய மற்றும் நல்ல விஷயங்கள் மற்றும் மார்க்க எழுச்சி ஆகிய அனைத்தும் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் வருகைக்கும், இக்காலம் ஒரு லைலத்துல் கத்ரின் காலம் என்பதற்கும் சான்றாகும். இங்கு ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். அதாவது விடியில் பொழுது வரை மலக்குகள் இறங்கிக் கொண்டிருப்பார்கள் என்று இறைவன் கூறுகிறான். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் காலகட்டம் ஒரு மிகச் சிறப்பான லைலத்துல் கத்ர் காலகட்டமாகும். அப்போது மலக்குகள் சமாதானத்தின் தூதுச் செய்திகளை ஏந்தியவாறு வலம் வந்து கொண்டிருந்தனர். பிறகு ரஸூல் (ஸல்) அவர்கள் இவ்வுலக வாழ்க்கை நிறைவு செய்யும் தருணம் வந்த போது இஸ்லாத்தின் வெற்றியைக் கண்டார்கள். இதுவே விடியற்காலம் ஆகும். அந்த காலம் மீண்டும் திரும்பாது. மார்க்கம் முழுமை பெற்றது. இறைவனின் அருள் முழுமை பெற்றது. திருக்குர்ஆன் முழுமையான இறுதியான ஷரீஅத்தாக இறங்கியது. இது ஒரு கடந்த காலமாகும்.

ஆனால் **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:** ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் நாயிப் அதாவது உதவியாளரின் காலகட்டம் இந்த காலகட்டமாகும். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்குப் பிறகு கிலாஃபத்தே ராஷிதா நிலைபெற்றது. இக்காலத்தில் 30 வருடங்கள் வரை இந்த விடியற்பொழுது இருந்து வந்தது. பிறகு மெல்ல மெல்ல ஆன்மீக இருள் சூழ்ந்து வந்தது. அது வளர்ந்து இப்போது முழுமையான இருள் நிறைந்த காலகட்டமாக இந்த காலகட்டம் இருக்கிறது. இதில் முன்னறிவிப்பிற்கு ஏற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றினார்கள். இவர்களின் வருகையோடு லைலத்துல் கத்ரும் நிழல் வடிவில் உருவாகியது. நாம் இப்போது வாழ்ந்து வருகின்ற இந்த காலகட்டம் விடியற்பொழுது ஆகும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு உள்ள காலமாகும். இந்த லைலத்துல் கத்ர் ஒரு வகையில் அவர்களது மரணத்தோடு முடிந்து விட்டது. அதன் பிறகு பிறந்துள்ள நமது இந்த காலகட்டத்திலிருந்து பலன் பெறும் போது இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு வரவிருக்கின்ற வெற்றிகளை உலக அலங்காரங்களைக் கொண்டு அலங்கரிக்கக் கூடாது. ஆன்மீகத்தின் தரங்களை உயர்த்துவதற்கு நமக்கு இறைவன் ஒவ்வொரு வருடமும் ரமலான் மாதத்தில் லைலத்துல் கத்ரை நினைவுபடுத்துகிறான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் லைலத்துல் கத்ரின் காலகட்டமாகும். இது கியாமத் வரை நிலைத்திருக்கும். இந்த லைலத்துல் கத்ர் ஒரு வகையில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் மரணம் மற்றும் திருக்குர்ஆன் இறங்கி முடிந்ததோடு முடிவடைந்து விட்டது. அதன் பின்பு விடியற்பொழுது ஆரம்பமானது. ஆனால் இன்னொரு வகையில் இந்த லைலத்துல் கத்ர் முடியாத ஒன்றாகும். எனவே ரமலானின் உரிமையை சரியாக பேணுங்கள். இதுவே உம்மத்திற்கு கிடைத்த தூதுச் செய்தியாகும். ரமலானின் ஒரு இரவு ஆன லைலத்துல் கத்ரிலிருந்து பலன்பெற முடியும். இறைவன் மீண்டும் மீண்டும் ஆன்மீக சூழ்நிலையை உருவாக்கி நம்மீது கருணை காட்டியுள்ளான். இந்த கருணையை நாம் உணர்ந்து நாம் நமது கடமைகளை செய்து வந்தால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் அளவில்லாத ஆன்மீக அருட்கொடையிலிருந்து பலன் பெற்றுக் கொண்டேயிருப்போம். இறைவன் நமக்கு தன்னுடைய அருட்கொடையை வழங்கிக் கொண்டிருப்பானாக. நமது எதிரிகள் நம்மை இரவு பகலாக தொந்தரவு செய்து பல்வேறு அடக்குமுறைகளைக் கையாண்டு நம்மை இருளில் இருக்குமாறு செய்து விடலாம் என்று நினைக்கின்றனர். நம்மை அழிக்க விரும்புகின்றனர். நம்மை சீரழித்து விடலாம் என்று கற்பனை செய்கின்றனர். இறைவனின் புறமிருந்து தோன்றிய ஜமாஅத்துகள் ஒருபோதும் அழிவதில்லை. வீணாவதில்லை. இன்று நமக்கு கொடுக்கப்பட்டு வருகின்ற துன்பங்கள் குறிப்பாக பாகிஸ்தானில் நமக்கு இழைக்கப்பட்டு வருகின்ற கொடுமைகள் நமக்கு லைலத்துல் கத்ரை வழங்குவதாக அமைய வேண்டும். பிறகு வரவிருக்கின்ற விடியற்பொழுது வெற்றியின் காலமாக இருக்க வேண்டும். இறைவன் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 27.08.2010**

Translated by : **Maulavi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**